## நம் ஒக்கலிகர் 48 குலத்தவர்கள் அக்காலத்தில் செய்த தொழில்கள், கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. **உண்டேனவரு** - 48 குலத்திற்கும் தலைவர் என்ற நிலையில் அதிக தெய்வ பக்தியுடையவர்கள். எனவே திருநீர் உருண்டை தயாரித்து விற்றவர்கள்.
2. **ஜானக்கல்வரு** - (Satekallu) என்ற ஒரு வகையான செந்நிறத்தில் உள்ளதை பொடியாக்கி, தெய்வத்திற்குப் படைத்து பிரசாதமாக வழங்கியவர்கள். இது செந்துரைமாக இப்போது விளங்குகிறது.
3. **அரசின வரு** - இவர்கள் சென்ற இடமெல்லாம் ஆட்சி அமைத்து, அரசர்களைப் போல் ஆண்டு வந்தனர். அதிகார வர்க்கத்தவர் என்றும் கூறலாம்.
4. **ஜலதேன வரு** - தன்னுடன் வந்தவர்கள் எப்போதும் ஆற்றைக் கடக்க முடியாத போது, ஈஸ்வரனை வணங்கி உபாயம் கண்டு வழி நடத்தி சென்றவர்கள் (இக்குலத் தலைவர் துங்க பத்திரா நதியைக் கடக்க ஈஸ்வரனுக்கு தன் தலையையே வெட்டி காணிக்கையாக்கி, மக்களை ஆற்றைக் கடத்தியவர் என்று பின் புராணம் கூறுகிறது.)
5. **ராகேனவரு** - கேழ்வரகு (Ragi) விவசாயம் செய்து, விற்று வாழ்ந்தவர்கள்.
6. **ஆவினவரு** - இவர்கள் பிற்காலத்தில் காவின காமரேயா என்ற பகுதியிலிருந்து வந்த சேர்ந்தவர்கள், தெய்வ அம்சம் கொண்டவர்கள், பசக்களை தெய்வமாக நினைத்து வளர்த்தவர்கள்.
7. **அட்டேனவரு** - புளியமரங்கள் அதிக அளவில் வளர்த்து, புளியை அடித்து, விற்று வாழ்ந்தவர்கள்.
8. **அளுவின வரு** - புதிய, புதிய ஆட்சி அமைத்து வாழ்ந்தவர்கள்.
9. **தான்யத வரு** - உணவுத் தானிய கடைகள் அமைத்து, விற்று வாழ்ந்தவர்கள், வியாபாரிகள்.
10. **எரடுக்கெரேயோரு** - இவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு குளங்களை வெட்டியமைத்து, விவசாயம் செய்து வாழ்ந்தவர்கள்.
11. **கரடேன வரு** - கரடிகளைப் பிடித்து அவைகளை விளையாடவும், நாட்டியமாடவும், பழக்கி அதன் மூலம் வாழ்ந்தவர்கள்.
12. **ஆலேன வரு** - அதிகமாக பசுக்களை வளர்த்து, பால் கறந்து தயிர், வெண்ணெய் விற்று வாழ்ந்தவர்கள்.
13. **சூரேனவரு (சூரியதவரு)** - சூரியனை கடவுளாக வணங்கி வாழ்ந்தவர்கள்.
14. **பசலேன வரு** - இவர்கள் பசலே (Bassale lants) செடிகளை வளர்த்து, அதன் இலைகளை பின்னி, உணவு சாப்பிட விற்றவர்கள் (அது பூவரச இலைகளாகவும் இருக்கலாம்)
15. **எம்மேனவரு** - எருமை மாடுகளை வளர்த்து, பால், வெண்ணெய், நெய் போன்றவற்றை விற்று வாழ்ந்தவர்கள்.

16. உயியோரு (உணிசேரு) - புளியந்தோப்புகளை உண்டு பண்ணி அதன் மூலம் வருவாய் பார்த்து வாழ்ந்தவர்கள்.

17. எரேனவரு 1 - இவர்கள் பசுக்களை இடம் விட்டு இடம் ஓட்டிச் சென்று வளர்த்தும், ஏர், கலப்பை செய்தும் வாழ்ந்தனர்.

18. செட்டேனவர் - இவர்கள் வியாபாரிகள், பணம் சம்பாதிப்பதிலே கண்ணும் கருத்துமாக வாழ்ந்தனர்.

19. கோனேன வரு - (கோணிப்பைகள்) தற்போது அவைகள் சணல் சாக்குகளாக உள்ளது. இவைகள் தானியங்கள், பொருட்கள் வைக்க உதவுகிறது. அவற்றைப்பின்னி விற்று வாழ்ந்தனர்.

20. அல்பேனவரு - இவர்கள் படை வீரர்களாக சேர்ந்து வாழ்ந்தனர்.

21. பெள்ளேனவரு - வெள்ளி, தங்கம் போன்றவற்றில் ஆபரணங்கள் செய்து விற்று வாழ்ந்தனர்.

22. அட்டேனவரு - பித்தளை, வெண்கலத்தில் சமையல் பாத்திரங்கள் செய்து விற்று வாழ்ந்தனர்.

23. ஜீரிகெனவரு - (ஜீரிகை) சீரகம் உற்பத்தி செய்து அவற்றை விற்று வாழ்ந்தனர்.

24. கட்டாரதவரு - இவர்கள் (Sward) வாள் வைத்து சண்டையிட்டு வாழ்ந்தவர்கள். வீரபராக்கிரமுடையவர்கள்.

25. வனமனவரு - (Forest) வனம் உண்டாக்கி அந்த மரங்களை விற்றும், தேன் போன்றவற்றை விற்று வாழ்ந்தவர்கள்.

26. கக்கேன வரு - எல்லா விசேஷ காலங்களிலும் காகங்களைக் கண்டு வணங்குபவர்கள். அதற்கு உணவு வைத்து வணங்குபவர்.

27. மெனசனவரு - (Menasu) மிளகு செடிகளை உற்பத்தி செய்து, மரங்களில் படர விட்டு, அதன் பயனை விற்று வாழ்ந்தனர்.

28. கம்பிளியவரு - கம்பிளி விரிப்பான் மற்றும் கம்பிளியால் பொருள்கள் செய்து விற்று வாழ்ந்தனர்.

29. எளியேரு - முத்துகடா (Muthugada) என்ற மரத்தின் இலைகளை (இளையோடு) பறித்து சாப்பாட்டு இலைகளாக விற்று வாழ்ந்தனர்.

30. மாய நவரு - மாந்தேப்புகள் உண்டு பண்ணி, மாம்பழங்களை உற்பத்தி (மாவினவர்) செய்து விற்று வாழ்ந்தனர்.

31. அரனேநரு - பருத்தி உற்பத்தி செய்து விற்று வாழ்ந்தனர்.

32. ஹரிக்கேனவர் - அருகம்புல், கோரை (Garikeplant) இவற்றை கடவுளுக்கு (கரிக்கேன வரு) படைத்து அதன் வருவாயில் வாழ்ந்தனர். யானைகளை பழக்கி தன்னுடன் வைத்திருந்தனர்.

33. சாரங்கதவரு - (Saranga) என்ற இசைக்கருவியுடன் ஒன்றி வாழ்ந்தனர். (வேறு) மான் வளர்த்தவர்கள்.

34. **இராவுத்தவரு** - கடினமான குதிரை சவ்வாரி செய்பவர்கள், ஆட்சியாளர்களிடம் குதிரைப் படை வீரர்களாகவும் தெய்வமாக வணங்குபவர்கள்.

35. **உத்திதவரு** - எறும்புப் புத்துக்களையும், மற்ற புத்துக்களையும் தெய்வமாக வணங்குபவர்கள். (Ant - hills)

36. **குடியோரு** - இவர்கள் விழாக்காலங்களில் கோவிலுக்கு எகந்த (குடி ஒக்குலு) சென்டாக்களை (Aesthetic Flags) ஊர்வலத்தில் பக்தியுடன் பிடித்துச் செல்வர். இவர்கள் மிகவும் பக்திமான்கள். இவர்களுக்கு பணியாட்கள் அதிகம்.

37. **ஜரியோரு** - இவர்கள் பூரான்களை (Centriadals) தெய்வமாக வணங்குபவர்கள். அவற்றை கொல்லமாட்டார்கள்.

38. **காளைய வரு** - இவர்கள் தூண்டில் (Gala) செய்து மீன்பிடித்து உண்டும், விற்றும் வந்தனர்.

39. **படவன வரு** - இவர்கள் எதிரிகளை வேவு (SÈ) பார்த்து, ஆட்சியாளர்களை (Drum) ட்ரம் அடித்து எச்சரிக்கை செய்வர். படையில் பெரும் பதவிகளையும் வகித்து வந்தனர். வீரம் உடையவர்கள்.

40. **தசலேன வரு** - இவர்கள் ஈட்டி மற்றும் கவசங்களுடன் (Eeti and Shield) படையில் பணியாற்றியவர்கள்.

41. **உள்ளேன வரு** - நிறைய குதிரைக் கொள்ளு (Horse - Grain) வளர்த்து விற்று வாழ்ந்தனர்.

42. **அட்டேனவரு** - அரசின் எட்டு மந்திரிகளுக்கும் ஒத்தாசையாக பணியாற்றுவர். (அஸ்டேனவரு) ஆட்சி பணியாளர்கள்.

43. **சாஸ்தான வரு** - அரசரை ஆயிரக்கணக்கான வாழ்த்து விரிவுரைகளுடன், அரண்மனையில் அரசர்களை வணங்குபவர். மனதில் பயமும், பக்தியும் உடையவர்கள் மற்றும் சாஸ்திரம் பார்ப்பவர்கள்.

44. **தம்குத்தின வரு** - அரண்மனையில் வாத்தியங்கள் ஊதுபவர்கள்.

45. **கொக்கேன வரு** - (Kogge) கொக்கே (கொளிஞ்சி) என்ற புளுக்களை பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் கொடுத்து செல்லப் பிராணிகளை வளர்த்தனர்.

46. **கக்கேன வரு** - (Basinga and Thoudilla) வெள்ளை எருக்களை மற்றும் காகத்தினை தெய்வங்களாக வணங்கினர்.

47. **மீசிலை வரு** - நெத்திச் சுட்டிகளை கட்டி வாழ்ந்தவர்கள்.

48. **ஔக்கல்லேனவரு (கோணினவரு)** - கோத்திரங்கள் பிரிக்கப்பட்ட போது தூங்கிவிட்டு கடைசியாக வநதவர்கள் தூக்கப்பிரியர்கள்.

**குறிப்பு :-** இந்த 48 கோத்திரங்கள்தான் பூர்வீகத்தல் இருந்தவை. ஆனால், அன்னியர்களின், கொள்ளை, கொலைகளுக்குப் பயந்து 150 ஆண்டுகள் வாழ்வாதாரம் தேடி பலபல இடங்களுக்கு குடிபெயர்ந்ததால் மொழியாலும், ஒரு குடும்பம் பல குடும்பங்களானதாலும், குலத்தின் பெயர்கள் மாறுபட்டும், ஒரே குலம் பல பிரிவுகளாகவும் இன்று மாறி, 101 குலகோத்திரங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர்.